[1989 மே 5

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தித் துறையிலே புதிதாக நியமிக்கப்பட்ட இந்த நியமனங்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக பெயர்களைக்கேட்டு, கொடுக்கப்பட்டதா? அல்லது பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக பெயர்கள் பெறப்பட்டு, 6 காலி இடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன.

விவசாயத் தொழிலாளிகளுக்கு இன்சூரன்ஸ் திட்டம்

216—(*வினா எண். 964) திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளிகளுக்கு இன்சூரன்ஸ் திட்டம் கொண்டு வரும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : விவசாயக் கூலிகள், சிறு விவசாயிகள், கைவினைஞர்கள், அதைப்போன்று சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்தும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு ஈட்டுறுதியுடன் இணைந்த ஓய்வு உதவித் திட்டம் என்ற ஒரு திட்டம் 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து செயல் படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைமலை நகரில் வீட்டுவரி.

217—(*வினா எண். 3410) திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மறைமலை நகரில் விதிக்கப்பட்டுள்ள வீட்டு வரி சென்னை மாநகராட்சியை விட அதிகமாக உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைக் குறைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கவுள்ளது ?